आगमवचनभूषणम्

ஆகம வசன பூஷணம்

ஷஷ்ட்யப்தபூர்த்திசாந்தி வெளியீடு

வெளியிடுவோர்

சிவாகம கலாமணி, வ்யாகரண சிரோமணி

டாக்டர். செ.வா.C.கார்த்திகேய சிவாச்சாரியார், M.A., Ph.D.

சைவாகம ஆசிரியர்

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

CSS

आगमवचनभूषणम्

ஆகம வசன பூஷணம்

எங்களது தாய் தந்தையரின்
ஷஷ்ட்யப்தபூர்த்தி மணிவிழாவின்
ஞாபகார்த்தமாக மணிவிழா மலராக
இப்புத்தகம் வெளியிடப்படுகிறது.

வெளியீடுவோர்

சிவாகம கலாமணி, வ்யாகரண சிரோமணி
டாக்டர்.செ.வா. C. கார்த்திகேய சிவாச்சாரியார்
M.A., Ph.D.
சைவாகம ஆசிரியர்
திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.
2009.

Rs. 100/-

मङ्गळम्

गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुः गुरुर्देवो महेश्वरः।
गुरुस्साक्षात् परब्रह्म तस्मै श्रीगुरवे नमः ।।

गुरवे सर्वलोकानां भिषजे भवरोगिनाम् ।
निधये सर्वविद्यानां दक्षिणामूर्तये नमः ।।

सदाशिवसमारम्भां श्रीकण्ठाचार्यमध्यमाम्।
अस्मदाचार्यपर्यन्तां वन्दे गुरुपरम्पराम् ।।

मन्त्रमूलं गुरोर्वाक्यं पूजामूलं गुरोर्पदम्।
ध्यानमूलं गुरोर्मूर्तिः मोक्षमूलं गुरोर्कृपा।।

।। श्रीसद्गुरुचरणारविन्दाभ्यां नमः ।।

Sivamayam

K. RAJAPPA GURUKKAL

Saivasidhantha Agama Sagaram
Sivagama Zana Banu
Sivagama Selver

Heriditary Sthanikar & Archakar
Sri Ekambaranathar &
Kailasanathar Temple

45. E.K. Sannathi Street, KANCHEEPURAM-631 502.
Ph : 04112 - 23948 Fax : 04112 - 23948

இறையருளால் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனு ம் குழ ந்தைப்பருவம் முத ல் பலவித வைபவங்களை காணும் பாக்கியம் அவனருளாலே தான் சித்திக்கிறது. வேதத்தில் சதமானம் பவதி சதாயு: புருஷ: என்று கூறுவதா ல் இக்கலியுகத்தில் 100 வயது வாழ்பவன் பூர்ணாபிஷேகம் செய்து கொள்ளும் தகுதியை அடைகிறான். க்ருதயுகத்தில் 400 ஆண்டுகளும், த்ரேதாயுகத்தில் 300 ஆண்டுகளும், த்வாபர யுகத்தில் 200 ஆ ண்டுகளும் இ க்கலியுகத்தில் 100 ஆண்டுகளும் மனிதனுடைய பூரண ஆயு ள் என நூல்கள் கூறுகின்றன.

தன்னுடைய கடமைகளை ஒருவன் சரியாகச்செய்யும் போது அவன் நிறை மனிதனாக கருதப்படுகிறான். பரீக்ஷைகளில் 100க்கு பாதி மதிப்பெண் வாங்கினாலேயே அவன் பாஸ் செய்தவனாகிறான். அதே மாதிரி தான் வாழ்க்கையிலும் இரு 30 ஆண்டுகளைக் கடந்தவன் இரண்டு முறை க்ரஹ நிலைகளை க் கடந்து மூன்றாவது முறை அடி எடுத்து வைக்கிறான். அச்சமயம் கோள்களின் ஆதிக்கத்தினாலே அவனது மனைவி மக்கட்கு சிரமங்கள் ஏற்படும் என சா ந்தி ர த்னாகரம், சா ந்தி குஸுமாகரம் என்ற நூல்கள் கூறுகின்றன. அதிலுள்ளபடி பரிகார ங்கள் செ ய்தவனுக்கு ந ல்ல வாழ்க்கை மேன்மேலு ம் வளரு ம் எனவு ம் அதே நூல்கள் கூறுகின்றன. வாழ்க்கையில் பல தான தருமங்கள் செய்தவனுக்கே தனது மனைவி மக்கள் அனைவரும் நலமாக இருக்கும்போதே இந்த கல்யாண வைபவம் நடக்கிறது. இறைவனுக்கு திருமணம் நடந்தபெழுது நமக்கு பார்க்கும்

பாக்கியம் இல்லாதிருப்பினும் அந்த வைபவத்தை கோவில்களில் உற்சவமாக நாம் கண்டு களிக்கிறோம். அதே போல தாய் தந்தையரது திருமணத்தை நடத்திவைத்து அவர்களது ஆசி பெறும் பாக்கியம் ஒருசிலருக்கே கிடைக்கிறது. அந்த வகையில் சிவஸ்ரீ. C. கார்த்திகேய சிவாச்சாரியர் தம்பதிகள் தங்களது பெற்றோர் திரு செ. வா. M. செல்லப்பா குருக்கள் - மனோரமா தம்பதியருக்கு இந்த ஷஷ்ட்யப்தபூர்த்தி சாந்தி வைபவத்தை சிறப்பாக நடத்தி அவர்களது ஆசிகளால் தங்களது ஷஷ்ட்யப்தபூர்த்தி, பீமரதசாந்தி, சதாபிஷேகம் தங்களது பெற்றோர் முன்னிலையில் நடைபெறும் பாக்கியத்தை இறையருளால் அடைவார்கள் என்பது பெரியோர்களது ஆசியும் ஆர்வமும் ஆகும்.

இச்சமயம் நம்மவர்களுக்கு (சிறார்களுக்கு) உதவும் வகையில் அரிய பெரிய விஷயங்கள் அடங்கிய அக்காலத்தில் இருமுறை வெளிவந்த "ஆகம வசன பூஷணம்" என்ற புத்தகத்தை வெளியிட இறையருள் கூட்டியது இவர்கள் செய்த பெரும் பாக்கியமாகும். திருப்பதியில் சிவஸ்ரீ. C. கார்த்திகேய சிவாச்சாரியர் ஆகம பாட ஆசிரியராக இருந்து மேலும் ஆகம ஆராய்ச்சிகள் நடத்தி முறைப்படி டாக்டர் பட்டம் பெற்று நம் சமூகத்தின் முக்கிய அந்தஸ்தை பெற்றிருக்கும் இச்சமயம் இவர்களது பெற்றோர்களது ஷஷ்டப்தபூர்த்தி வைபவம் நேர்ந்தது இவர்களது பாக்கியமாகும்.

ஸ்ரீ காமாக்ஷிநாதன் அருளால் ஷஷ்டப்தபூர்த்தி தம்பதிகள் முறைப்படி பீமரதசாந்தி, சதாபிஷேகம், பூர்ணாபிஷேகம் யாவும் கண்டு அனைவருக்கும் உதாரண தம்பதிகளாய் விளங்கவேண்டும் என பரமேச்வரனின் தாளினைப் பணிந்து போற்றி ஆசீர்வதிக்கின்றேன்.

சாளுவ க. ராஜப்பா சிவாச்சாரியார்
காஞ்சிபுரம்.

உ
ஓம் ஸ்ரீ நமோ மாத்ரே

சாஹித்ய மீமாம்ஸ சிவாகம சிரோமணி & சாஹித்ய மீமாம்ஸ விசாரதா
Dr. S. உமாபதி சிவாச்சாரியார் M.A., Phd.,
தலைவர் : ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட வேத சிவாகம பாடசாலை, உறுப்பினர் : ஆகம வல்லுநர் குழு
உறுப்பினர் : குமாரதந்திரம் ஆய்வுக்குழு, மாநில கொள்கைப் பரப்பு செயலாளர் : தமிழ்நாடு அர்ச்சகர்கள் சங்கம்,
ஆலோசகர் : ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட அர்ச்சகர்கள் க்ஷேம நலச்சங்கம்
புதிய எண். 85 பழைய எண். 40 சாலைத்தெரு, T.T.D. வளாகம், காஞ்சிபுரம் – 2.
போன் : 044-27230236 செல் : 98940 24372

எல்லாம் வல்ல சர்வேச்வரன் உலகத்திலுள்ள அனைத்து ஜீவராசிகளும் இன்புற்று வாழ்வதற்கு வேதங்களையும் ஆகமங்களையும் இவ்வுலகிற்கு அருளினார்.

அந்த வேதாகம முறைப்படி ஆத்மார்த்த பூஜையும், பரார்த்தபூஜையும் செய்து உலகத்திலுள்ள அனைத்து ஜீவராசிகளும் இன்புற்று வாழ்ந்து வருவதில் எந்த சந்தேகமும் இல்லை. வேதத்தினுடைய பொருள் அறிவதற்கு வேத பரிபாஷைகள் இருப்பது போல் ஆகமங்களினுடைய கருத்துக்களை எல்லோரும் நன்கு தெரிந்து கொள்வதற்கு ஆகம வசன பூஷணம் என்னும் நூலானது நமது முன்னோர்களால் முன்பு அனுக்ரஹம் செய்யப்பட்டது.

இந்த ஆகம வசன பூஷணம் என்ற நூல் க்ரந்த லிபியிலும் தமிழிலும் தென்னிந்திய அர்ச்சக சங்கத்தின் மூலமாக முன்பு வெளியிடப்பட்டது. உலகத்திலுள்ள அத்துனை ஆகம அறிஞர்களும் ஆகம வசன பூஷண நூலினுடைய விஷயங்களை அறிந்து எம்பெருமான் சர்வேச்வரனை அதன் படி வழிபாடு செய்து உலக க்ஷேமத்தை அடைய இந்நூலை நாகர லிபியிலும், தமிழிலும் தொகுத்து வழங்க வேண்டும் என எண்ணி எனது மாணவர் திருப்பதி வேத விக்ஞான பீடத்தின் சைவாகம ஆசிரியர் Dr. C. கார்த்திகேய சிவாச்சாரியார் M.A., Ph.D. அவர்கள் சீரிய முயற்சியுடன் அவரது

தாய்தந்தையர் திரு. செ.வா. செல்லப்பாகுருக்கள்-மனோரமா தம்பதியரின் ஷஷ்ட்யப்தபூர்த்தி விழா மலராக வெளியிடுவதைக் கண்டு சந்தோஷமடைகிறேன்.

இவர் இதே போல் பல ஆகம நூல்களை இவ்வுலகிற்கு காட்டி லோக க்ஷேமத்திற்காக பாடுபடவேண்டும் என்று எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி உடனவர் ஸ்ரீ சிதம்பரேச்வரர் திருவருளையும், ஸ்ரீ மூகாம்பிகையினுடைய திருவருளையும், ஸ்ரீதூர்வாசார்யர் குருவருளையும் ப்ரார்த்திக்கிறேன்.

S. உமாபதி சிவாச்சாரியார்
காஞ்சீபுரம்.

உ Ph-044-22237052.
SIVAGAMA PRAVEENAR, ALANKARA KALARATHNAM
THATHPURUSHA SIVAM

T. G. KALYANASUNDARA SIVACHARIAR

Plot No. 23, Shawwallace Colony, (Ganesh Karthic Apartment)
Chitlapakkam, Chennai - 600 064.

ஸ்ரீ மஹாகணபதி துணை

ஆசியுரை

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் உள்ள வேத சிவாகம பாடசாலையில் சிவாகம ஆசிரியராக பணிபுரியும் சிவஸ்ரீ. C. கார்த்திகேய சிவாச்சாரியார் எனது மாணவனும் சிஷ்யனும் ஆவார்.

அவர் வேத சிவாகம சாஸ்த்ரங்களை முறைப்படி ஆர்வத்துடன் பயின்று பல விருதுகளையும் பட்டங்களையும் பெற்றவர்.

அர்ச்சகப் பெருமக்கள் அனைவருக்கும் சிவாகமங்களின் சாரமாகவும் வைகறைத்தியானம் முதலாக உள்ள சிவாகம ஞான விஷயங்களை ஆகம வசன பூஷணம் என்ற நூல் (க்ரந்தலிபியில் இருந்ததை) தற்சமயம் அனைவரும் அறிந்த நாகர லிபியில் மற்றும் தெலுங்கிலும் வெளியிடுவது அவசியம் என்று உணர்ந்து அதை அவரின் தாய் தந்தையரின் ஷஷ்ட்யப்தபூர்த்தி மணிவிழாவில் வெளியிடப்படுவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இப்புத்தகம் சிவாகம சாஸ்த்ரம் பயில முற்படும் நம் மாணாக்கர்களுக்கு பால பாடமாக பயிலவும், பணி செய்யவும் ஏற்றதாகும் என்பதில் எவ்வித ஐயமும் இருக்காது.

இவர் தொண்டு மேன்மேலும் வளர எல்லாம்வல்ல ஸ்ரீ சுந்தர குஜாம்பிகா ஸமேத ஸ்ரீ தேஜிநீவனேஸ்வரரின் திருவருளை முன்வைத்து நல்லாசி கூறுகிறேன்.

சுபமஸ்து

அலங்கார கலாரத்னம்
T.G. கல்யாண சுந்தர சிவாச்சாரியார்
சிட்லபாக்கம்.

ஸ்ரீ குருப்யோ நம:

முகவுரை

ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீவேதாந்தீஸ்வரர் அனுக்ரஹத்தினாலும், குருவருளாலும் தற்பொழுது எங்கள் தாய்தந்தையரின் ஷஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவத்தில் ஆகம வசன பூஷணம் என்னும் இந்த அரிய நூல் வெளியிடப்படுகிறது.

இந்நூலானது அன்னியூர் ஸ்வாமிநாத சிவாச்சாரியார் அவர்களால் தொகுத்தளிக்கப்பட்டு, சிவஸ்ரீ. சி. சுவாமிநாத குருக்கள் பொதுக்காரியதரிசி, தென்னிந்திய அர்ச்சக சங்கத்தின் மூலமாக 1971, 1977ம் ஆண்டுகளில் முன்பு வெளியிடப்பட்டது. தற்பொழுது இப்புத்தகம் கிடைப்பது அரிதாகிவிட்ட படியாலும், இதில் பல அரிய விஷயங்கள் உள்ள படியாலும் மறுபதிப்பாக வெளியிடப்படுகிறது.

எங்கள் தந்தையாரின் ஷஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவத்தில் ஆகம சம்பந்தமான புத்தக வெளியீடு செய்ய வேண்டுமென ஈச்வர அருளால் எண்ணிய பொழுது பல வித்வான்களின் ஆலோசனையின் பேரில் புதியதாக புத்தக வெளியீடு என்பதை விட பழமையான அரிய புத்தகங்களின் மறுபதிப்புகள் மிகுந்த பயன் தரும் என்ற ஆலோசனைப்படி இப்புத்தகம் தற்பொழுது வெளியிடப் படுகிறது.

இப்புத்தகம் ஆரம்ப நிலையில் ஆகமம் பயிலும் மற்றும் ஆகம ஞானத்தை அறிய விரும்புவர்களுக்கும் மிகுந்த பயன் தரும் என்பது திண்ணம்.

இப்புத்தகம் பல வித்வான்களிடம் காண்பிக்கப்பட்டு, கடலூர் சிவஸ்ரீ. S. சம்பந்த சிவாச்சாரியார் அவர்களால் பரிசோதனை

செய்யப்பட்டு, பல திருத்தங்களுடன் வெளியிடப்படுகிறது.

மேலும், இவ்வாறான பல புத்தகங்கள் வரும் காலத்தில் வெளியிட எண்ணமுள்ள போதும், அக்ஞானியான எனக்கு ஞானவான்களாகிய சிவாசார்ய பெருமக்களும், குருவருளும், ஈச்வரனும் அனுக்ரஹிக்க வேண்டுமாய் இறைஞ்சுகிறேன்.

புத்தகங்களில் தவறுகள் மற்றும் அச்சுப்பிழைகள் ஏற்படுவது இயற்கையாதலால், அவ்வாறான பிழைகள் இருக்குமாயின் சைவாகம வித்வான்கள் எனக்கு தெரிவிக்க வேண்டுமாயும், வருங்காலத்தில் வரும் பதிப்புகளுக்கு உபயோகமாயிருக்குமெனவும் கேட்டுக் கொள்கிறேன்.

இச்சிறியோனுக்கு அனுக்ரஹ பாஷணம் அளித்தருளிய என் குருமார்களின் உலகத்திற்கும், அச்சிடுவதில் சிறப்பாக அருகிலேயே இருந்து உதவி புரிந்த சங்கீத வித்வான் கல்லிடைக்குறிச்சி. ஸ்ரீ வேங்கடேசன் அவர்களுக்கும், எனது தந்தையாரின் நெருங்கிய நண்பர் ஸ்ரீ சங்கமேஸ்வரன் அவர்களுக்கும் சிறப்பான முறையில் அச்சிட்டோருக்கும் உதவி புரிந்த அனைவருக்கும் என் தாழ்மையான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்புத்தகத்தை எனது தாய், தந்தையர்களுக்கும் , குருமார்களுக்கும், சைவ உலகத்திற்கும் பக்தியுடன் ஸமர்ப்பிக்கின்றேன்.

இவன்,
Dr. செ.வா. C. கார்த்திகேய சிவாச்சாரியார்
M.A., Ph.D.
சைவாகம ஆசிரியர்
திருமலை திருப்பதி தேவஸ்தானம்,
திருப்பதி.

மணிவிழா தம்பதிகள் குறிப்பு

தொண்டைநன்நாட்டில், நகரேஷு காஞ்சீ என காளிதாஸனால் போற்றப்பட்ட காஞ்சீ மாவட்டத்தில் செங்கற்பட்டு நகரில் சிவஸ்ரீ. முத்துக்குமாரஸ்வாமி குருக்களுக்கும், ஸ்ரீமதி. சரஸ்வதி அம்மாளுக்கும், விரோதி வருடம் சித்திரை மாதம் ரேவதி நக்ஷத்ரம் கூடிய சுபயோக சுபதினத்தில் (27-04-1949) விஸ்வநாதகுருக்கள் (எ) செல்லப்பா குருக்கள் ஆகிய எங்களது பெருமைமிகு தந்தையார் பிறந்தார்.

தனது இளமையில் பள்ளிப்படிப்புடன் திரு. நரசிம்மாச்சாரியாரிடம் ஸம்ஸ்க்ருதமும், திரு. நமச்சிவாய முதலியாரிடம் இலக்கியத் தமிழும் சிறப்புறக் கற்றார். குடும்பச் சூழ்நிலையினால் கல்லூரிப்படிப்பை பாதியில் நிறுத்தியபோதும் ஆசிரியப்பயிற்சி பெற்று ஆசிரியராகப்பணியில் சேர்ந்தார்.

தனது 20வது வயதில் தனது சகோதரியின் மகளும், சிவஸ்ரீ. கருங்குழி **P.N.** கிருஷ்ணமூர்த்தி குருக்கள் - ஸ்ரீமதி ராஜம்மாள் தம்பதியரின் மகளுமான ஸ்ரீமதி மனோரமாவை திருமணம் புரிந்தார்.

ஆசிரியராக பணியில் சேர்ந்த எனது தந்தையார் தனது வம்ச பாரம்பரியமான கோவில் பூஜையை விடாமலும், முழு ஈடுபாட்டுடனும் திறம்படச் செய்துவந்தார்.

இவருடைய மிகச்சிறப்பான இல்லறத்தின் நல்லறமாக இரண்டு மகன்களும், இரண்டு மகள்களும் பிறந்தனர்.

தனது 25வது வயதிலேயே பள்ளியின் பொறுப்பாசிரியராகப் பணியேற்று பள்ளியை திறம்பட நடத்தி பலருக்கும் வழிகாட்டுதலாக இருந்தார் என்றால் அது மிகையல்ல. பள்ளியின் நிர்வாகப்பொறுப்பு, பாரம்பரிய கோவில் பூஜை, குடும்பப் பொறுப்புகளுக்கிடையேயும் **B.Lit.,**

B.Ed., M.A. ஆகிய மேற்படிப்புகளைப்படித்து, தனது கல்வி தாகத்தையும் தீர்த்துக்கொண்டார்.

தான் மாறுதல் அடைந்த பள்ளிகள் அனைத்திலும் கிணறுகளை தூர்வாருதல், மரங்கள் நடுதல், புதிய கட்டிடங்களைக்கட்டுதல், மாணவர்களின் திறமைகளை பல போட்டிகள் மூலமாகவும், பல விதங்களிலும் வெளிக் கொணருதல், மக்களிடையே ஆன்மீக உணர்வை நிலை நாட்டுதல் என பல நல்திட்டங்களை செயல்படுத்தினார் என்பதில் பெருமை கொள்கிறோம்.

இவர் பள்ளிகளின் தரத்தை உயர்த்த மிகுந்த முனைப்பைக்காட்டினார். அதன் விளைவாக இவர் மாறுதல் அடையும் பள்ளிகள் அனைத்தும் ஆரம்பநிலைப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், சுமார் பத்திற்கும் மேற்பட்ட பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டன.

மாணவர்களின் தரமே நாட்டின் அடித்தளம் என்பதை பலருக்கும் விளக்கிய எனது தந்தையார் தானும் உதாரணபுருஷராய் தான் பணியாற்றிய பள்ளிகள் அனைத்திலும் ஆசிரியர்களின் குறைபாடு காணப்பட்டபோது தானே முன்வந்து தகுதிவாய்ந்த ஆசிரியர்களை **PTA** மூலம் நியமித்து, தனது சம்பளத்தின் மூலமாகவும் அவர்களுக்கும் சம்பளம் அளித்தார் என்பதில் அனைவரும் பெருமைப்படுகின்றனர்.

இவருடைய பணிக்காலங்களில் பள்ளிகளின் கல்வித்தரம் பன்மடங்கு உயர்த்தப்பட்டது. பள்ளிகள் அனைத்து வசதிகளையும் பெற்றது. பள்ளிகளில் இலக்கியமன்றம், பாலர் சபை, சிறுசேமிப்பு, அறிவியல் கண்காட்சி போன்றவற்றை சிறப்பாக நடத்தியும், சுமார் 20க்கும் மேற்பட்ட கல்விச்சுற்றுலாக்களை நடத்தியும் 36 ஆண்டு காலம் அயராத சேவை புரிந்தார். இதுமட்டுமா என்ன?

எங்களது தந்தையாரின் ஆன்மீகப்பணிகள் -

தனது 16வது வயதிலேயே குடும்பப்பொறுப்புகள் அனைத்தையும் ஏற்ற என் தந்தையார் சதாவதானி(ஒரே நேரத்தில் 100 பேரின் கேள்விகளுக்கு பதிலளிப்பவர்) போல் விளங்கி குடும்பப்பொறுப்பு, கோவில் பூஜை, கும்பாபிஷேகங்கள், உலக நன்மைக்கான பலப்பல ஹோமங்கள், பல சங்கங்களை ஏற்று நடத்துதல், கேட்போருக்கு இல்லையெனக் கூறாது உதவுதல் என பற்பலப்பல பணிகளை ஒரே நேரத்தில் அவனருளாலே அவன் தாள் வணங்கி என்பதைப்போல எவ்விதமான மனச்சஞ்சலமும் இல்லாமல், அனைத்தையும் சிவனுக்கே அர்ப்பணித்து திறம்பட நடத்திக்கொண்டு வருகிறார் என்பது அனைவரும் அறிந்ததேயாகும்.

செங்கற்பட்டில் லலித் சேவா சங் என்ற அமைப்பை பலருடன் சேர்ந்து ஏற்படுத்தி சங்கத்தின் நிரந்தர செயலளாளராக இருந்து கூ சங்கத்தின் மூலமாக ஏழை, மற்றும் பிராமண மாணவர்களின் படிப்புச்செலவுகளை ஏற்றார். மேலும் உலக நன்மைக்காக பற்பல ஹோமங்களை நடத்தினார். கடந்த 40 வருடங்களுக்கு மேலாக செங்கற்பட்டு மாநகரில் சங்கரஜெயந்தி விழாவினை மிகச்சிறப்பான முறையில் கூ சங்கத்தின் மூலமாக நடத்தி வருகிறார். மேலும் சுமார் 35 ஆண்டுகளுக்கு முன் பஞ்சலோஹத்தில் ஆதிசங்கரர் விக்ரஹம் செய்யப்பட்டு எனது தந்தையின் மூலமாக சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

எனது தந்தையார் செங்கல்பட்டு மாநகரில் ஸ்ரீராமஜெயம், ஜயஜய சங்கர ஹரஹர சங்கர , சிவ சிவ, போன்ற நாமங்கள் எழுதுவோர்களுக்கு பரிசுகளும், தேவாரம், திருவாசகம், திருப்பாவை, திருவெம்பாவை முதலிய ஆன்மீக நூல்களை மாணவர்களுக்கு படிப்பித்து சிறப்பாக தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மற்றும் விருப்பத்துடன் கலந்து கொள்ளும் அனைவர்களுக்கும் கூட

பரிசுகள் தந்து அவர்களை உற்சாகப்படுத்தி வருகின்றார். பல ஆன்மீக சொற்பொழிவுகளை நடத்தி மக்களை ஆன்மீகச்சிந்தனையில் ஈடுபட வைத்துள்ளார். இவரின் பேச்சுக்களைக்கேட்ட பல நாஸ்திகர்கள் சிறந்த ஆஸ்தீகர்களாக மாறியுள்ளார்கள் என்பதில் ஆஸ்தீக உலகம் பெருமை கொள்கிறது.

இந்து சமய மன்றத்தின் செயலாளராக இருந்து பல வருடங்கள் ஆன்மீகப் பணியாற்றியுள்ளார். தற்பொழுது அகில இந்திய ஆதிசைவ சிவாச்சாரியார்கள் சேவா சங்கத்தின் காஞ்சீபுர மாவட்ட(காஞ்சீபுரம் வட்டம் நீங்கலான) செயலாளராக இருந்துகொண்டு மிகச்சிறந்த சைவப்பணியாற்றி வருகிறார்.

சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன் மஹேந்த்ரவர்மபல்லவமன்னனால் செங்கல்பட்டு அருகில் வல்லம் மலையில் குடைவரைக் கோவில்கள் இரண்டு அமைக்கப்பட்டன. ஒன்றில் பஞ்சமூர்த்தியுடன் கூடிய ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீவேதாந்தீஸ்வர் திருக்கோவிலும், மற்றொன்றில் ஸ்ரீ பூதேவி, ஸ்ரீதேவி சமேத ஸ்ரீகரிவரதராஜஸ்வாமி திருக்கோவிலும் அமைந்துள்ளது. இங்கு மட்டுமே மஹேந்த்ரவர்ம பல்லவ காலத்தின் ஆறு தமிழ்க்கல்வெட்டுக்கள் சிதிலமடையாத நிலையில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோவிலை எங்களது மூதாதையர்களானவர்கள் 1860ல் சிவஸ்ரீ. வீராசாமி குருக்களும், 1880ல் அவரது மகன் சிவஸ்ரீ. விஸ்வநாத குருக்களும், 1900ல் அவரது மகன் சிவஸ்ரீ. நீலகண்ட குருக்களும், 1920ல் அவரது மகன் சிவஸ்ரீ. சாம்பசிவ குருக்களும், 1960 வரை அவரது மகன் சிவஸ்ரீ. குமாரசாமி குருக்களும், 1961 முதல் எனது பெருமைமிகு தந்தையாரும், தற்பொழுது அவருடன் கூட நாங்களும் பரம்பரை அறங்காவலர்களாக இருந்து கொண்டும் பூஜை செய்து கொண்டும் வருகிறோம்.

மேலும் இத்திருக்கோவிலில் எங்களது தந்தையாரின் பெருமுயற்சியின் விளைவாக கடந்த 30 ஆண்டுகளாக உழவாரப்பணி நடைபெற்று வந்தது. ஆயினும் மலை ஏறிவருவதற்கு திருப்படிகள் இல்லாமையால் பல அன்பர்கள் துணையுடன் திருப்படிகள் அமைக்கப்பட்டன. மலை மீதுள்ள கோவிலாதலால் பலர் (சுமார் 20 பக்தர்கள்) ஒரே நேரத்தில் தரிசிக்க இயலாத நிலையில், பக்தர்களின் உதவியுடன் தானும் ஒரு பெருந்தொகையை (எனது தந்தையின் விருப்பமில்லாமையால் தொகை குறிப்பிடப் படவில்லை) கூட்டி சுமார் 15 லக்ஷத்திற்கும் மேலாக செலவு செய்து தற்பொழுது 200க்கும் அதிகமான பக்தர்கள் ஒரே நேரத்தில் நின்று தரிசிக்கும்படி செய்துள்ளது என்பது எனது தந்தையாரின் நீண்டநாள் கனவை நிறைவேற்றியது அவரின் வாழ்நாள் பெருஞ்சாதனையாகும். இதனால் கோவிலில் உள்ள பல்லவனின் கலையம்சம் பொருந்திய 10 அழகிய சிற்பங்களும், 6 பல்லவ கால தமிழ்க்கல்வெட்டுக்களும் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

பல்லவ மன்னனாலேயே மஹாமண்டபம் கட்ட எடுக்கப்பட்ட முயற்சி தற்போது எங்களது தந்தையாரின் மூலமாக நிறைவேறியுள்ளது.

தற்போது மாவடிசேவையுடன் கூடிய தியான மண்டபமும், மடப்பள்ளியும், தண்ணீர்வசதி மற்றும் மின்வசதியும் பெறுமுயற்சியின் மூலம் நிறைவேற்றியுள்ளார் .

மலைக்கோவிலைப் பற்றி சிவக்கொழுந்துப்பாவலர். ரா. குப்புசாமி அவர்கள் எழுதிய 111 பாடல்களைக்கொண்ட தொகுப்பை பலரிடம் வேண்டியும் புத்தகமாக வெளியிட இயலாத நிலையில் எங்களது தந்தையார் புத்தகமாக வெளியிட்டு அரங்கேற்றம் செய்வித்தார். தனது தாயின் நீண்டநாள்

விருப்பத்திற்கிணங்க அவரின் 90வது வயதில் நீண்டகாலத்திற்குப் பிறகு இத்திருக்கோவிலிற்கு 2003ல் கும்பாபிஷேகமும், பிறகு சிலப்பல திருப்பணிகள் செய்வித்து 2007ல் மறுபடியும் கும்பாபிஷேகமும் இருமுறை செய்தார்.

எனது தந்தையார் பலருக்கு அளித்த உதவிகள் ஏராளம். சமயப்பணி அளவிடற்கரியது. சிவோஹம் பாவனையினால் அனைத்தையும் சிவனுக்கே அர்ப்பணித்து இவர் வாழ்ந்துவரும் முறை அனைவருக்கும் முன்னுதாரணமாக அமைந்துள்ளது. நாங்கள் பல ஜன்மங்களில் செய்த தவத்தின் பயனாகவே இவர்களின் மக்களாக பிறந்தோம், இவர்கள் செய்த தர்மத்தின் பயனாகவே நல்வாழ்க்கையைப் பெற்றோம் என்பதில் பெருமை கொள்கிறோம்.

தாய்தந்தையரின் பாதகமலங்களில் நமஸ்காரத்துடன்,

செ. வா. C . பாஸ்கர குருக்கள்

செ. வா. C . கார்த்திகேய சிவாச்சாரியார்.

१. प्रातःकृत्यम्
1. காலையில் செய்ய வேண்டியவை

ब्राह्मे मुहूर्ते उत्थाय सम्यग्ध्यात्वा सदाशिवम् ।
शौचञ्च दन्तशुद्धिञ्च स्नानञ्च भूतिधारणम्॥
सन्ध्यां जपन्तु गायत्र्याः कुर्यात्सूर्योदयात्पुरा।
उदिते तु दिवानाथे कुर्यात्शूद्रादयस्तथा॥

पदम्	पदार्थः
ब्राह्मे मुहूर्ते	விடியற்காலையில்
उत्थाय	எழுந்திருந்து
सदाशिवम्	ஈச்வரனை
सम्यक्	நன்றாக
ध्यात्वा	த்யானம் செய்து
शौचञ्च	சுத்தியையும்
दन्तशुद्धिञ्च	பல் தேய்த்தலையும்
स्नानञ्च	நீராடுதலையும்
भूतिधारणम्	திருநீறு தரித்தலையும்
सन्ध्यां	ஸந்த்யாவந்தனத்தையும்
गायत्र्याः	காயத்ரியினுடைய
जपं	ஜபித்தலையும்
सूर्योदयात्पुरा	விடியுமுன்
कुर्यात्	செய்ய வேண்டும்.
दिवानाथे	சூரியன்
उदिते तु	உதித்த பிறகோவெனில்
तथा	முன் சொன்னபடி
शूद्रादयः	சூத்திரர், ஸ்த்ரீ முதலியவர்கள்
कुर्यात्	செய்ய வேண்டும்.

२.पूजा द्वैविध्यम्
2. பூஜை இரண்டு விதம்

आत्मार्थञ्च परार्थञ्च पूजा द्वैविध्यमुच्यते।
आत्मार्थपूजा हीनस्तु न कुर्यात्तु परार्थकम्॥

आत्मार्थञ्च	தனக்கு மட்டும் பலன் தரும் சிவபூஜையென்றும்
परार्थञ्च	தனக்கும் பிறர்களுக்கும் பலன் தரும் பூஜையென்றும்
पूजा द्वैविध्यमुच्यते	பூஜையினுடைய இரண்டு விதமானது சொல்லப்படுகிறது.
आत्मार्थपूजा हीनस्तु	சிவதீக்ஷை பெற்று ஆத்மார்த்த பூஜை செய்யாதவன்
परार्थकम्	பரார்த்த பூஜையை
न कुर्यात्	செய்யக்கூடாது.

३. षडाधारशिवार्चनम्
3. ஆறுவித சிவபூஜைகள்

दिवाकरे चात्मनि च लिङ्गे वह्नौ गुरौ तथा।
पुस्तके च समाख्यातं षट्स्थानेषु शिवार्चनम्॥

दिवाकरे च	சூர்யனிடத்திலும்
आत्मनि च	ஆத்மாவினிடத்திலும்
लिङ्गे च	சிவலிங்கத்தினிடத்திலும்
वह्नौ	அக்னியிலும்
गुरौ	ஆசார்யனிடத்திலும்

तथा	*அப்படியே*
पुस्तके च	*ஆகம புஸ்தகத்திலும்*
षट्स्थानेषु	*ஆக இந்த ஆறு இடங்களில்*
शिवार्चनं	*சிவனை பூஜித்தல்*
समाख्यातम्	*சொல்லப்பட்டுள்ளது.*

४. सूर्यपूजायाः आवश्यकता
4. சூரிய பூஜையின் அவசியம்

दिवाकरस्तु सकलः शिवो हि निष्कलात्मकः।
सकलं पूर्वमाराध्य पश्चान्निष्कलमर्चयेत्॥

दिवाकरस्तु	*சூர்யனோவெனில்*
सकलः	*உருவத்துடன் கூடினவன்*
शिवो हि	*ஈச்வரனோவெனில்*
निष्कलात्मकः	*அருவத்திருமேனியுடையவன்.*
	ஆகையால்,
सकलं	*உருவப்பொருளை*
पूर्वं	*முதலில்*
आराध्य	*பூஜித்து*
पश्चात्	*பிறகு*
निष्कलं	*அருவப்பொருளை*
अर्चयेत्	*பூஜிக்க வேண்டும்.*

५.आलयप्रवेशनियमः
5. ஆலயத்தின் உள்ளே செல்ல நியமம்

सुमनाश्च सुशान्तश्च भूत्वा ध्यायन् सदाशिवम्।
पादप्रक्षाळनं कृत्वा आलयन्तु प्रवेशयेत्॥

सुमनाश्च	நல்ல மனதுடையவனாகவும்
सुशान्तश्च	சாந்தமுள்ளவனாகவும்
भूत्वा	ஆகி
सदाशिवं	ஈச்வரனை
ध्यायन्	தியானித்துக் கொண்டு
पादप्रक्षालनं	கால் சுத்தம் செய்தலை
कृत्वा	செய்து
आलयन्तु	தேவாலயத்தில்
प्रवेशयेत्	ப்ரவேசிக்க வேண்டும்.

६. गणपतेः कुट्टनम्

6. கணபதியினிடம் குட்டிக்கொள்ளுதல்

हस्ताभ्यां सव्यवामाभ्यां मुष्टिमुद्रां प्रकल्पयेत्।
मध्यमाङ्गुलिमध्यैश्च कुट्टयेन्मस्तकन्दृढम्।
मस्तकस्थाऽमृतेनैव सर्वान् देहान् प्रसेचयेत्।
इत्थं सुधाभिषेकेण गणेशस्य प्रियं भवेत्॥

सव्यवामाभ्यां	வலது இடதான
हस्ताभ्यां	கைகளினால்
मुष्टिमुद्रां	விரல்களை மூடிக்கொள்வதான முஷ்டி முத்திரையை
प्रकल्पयेत्	நன்றாக செய்து கொள்ள வேண்டும்.
मध्यमाङ्गुलिमध्यैः	இரண்டு கைகளின் நடுவிலுள்ள மூன்று விரல்களின் நடுபாகங்களினால்
मस्तकं	நெற்றியின் இரண்டு பாகத்தையும்
दृढं	நன்றாக

कुट्टयेत्	குட்டிக்கொள்ள வேண்டும்.
मस्तकस्थ	கபோலத்திலுள்ள
अमृतेनैव	அம்ருதத்தினால்
सर्वान्	ஸமஸ்தமான
देहान्	சரீரத்தையும்
प्रसेचयेत्	நன்றாய் நனைக்க வேண்டும்.
इत्थं	இம்மாதிரியான
सुधाभिषेकेण	அம்ருத ஸ்நானத்தாலே
गणेशस्य	விநாயகருக்கு
प्रियं	அன்பானது
भवेत्	உண்டாகும்.

७. वृषभे प्रार्थना

7. வ்ருஷபரிடத்தில் ப்ரார்த்தனை

ईश्वराभिमुखं देवं आसीनं वृषनायकम्।
शिवं दर्शयितुं स्वामिन् प्रणम्य प्रार्थयाम्यहम्॥

ईश्वराभिमुखं	சிவனுக்கு எதிர்முகமாக
आसीनं	உட்கார்ந்துள்ள
देवं	தேவரான
वृषनायकं	வ்ருஷபதேவரை
प्रणम्य	வணங்கி
अहं	நான்
स्वामिन्	ப்ரபுவே!
शिवं	ஈசனை
दर्शयितुं	காண்பதற்கு
प्रार्थयामि	வேண்டுகிறேன்.

८. द्वारदेवताः
8. த்வார தேவதைகள்

प्रथमे गोपुरद्वारे स्थापयेद्गणनायकम्।
द्वितीये भैरवं स्थाप्य तृतीये द्वारपालकौ॥
गर्भगृहस्य द्वारे तु गजाननगुहौ तथा।
शिवागमोक्तवत्स्थाप्य विधिवत्पूजयेद्गुरुः॥

प्रथमे	முதலாவதான
गोपुरद्वारे	கோபுரவாயிலில்
गणनायकं	விநாயகரை
स्थापयेत्	ப்ரதிஷ்டை செய்ய வேண்டும்.
द्वितीये	இரண்டாவது கோபுரவாயிலில்
भैरवं	பைரவரை
स्थाप्य	ப்ரதிஷ்டித்து
तृतीये	மூன்றாவது கோபுரவாயிலில்
द्वारपालकौ	இரண்டு த்வாரபாலகர்களையும்
मूललिङ्ग गर्भगृहस्य द्वारे तु	மூலலிங்கம் இருக்கும் கர்ப்பக்ரஹத்தின் வாசற்படியின் இரண்டு பக்கங்களிலும்
गजानन	விநாயகரையும்
गुहौ	ஸ்கந்தரையும்
शिवागमोक्तवत्	சிவாகமத்தில் சொன்னபடி
स्थाप्य	ப்ரதிஷ்டித்து
विधिवत्	சாஸ்த்ரப்படி
गुरुः	சிவாச்சாரியர்
पूजयेत्	பூஜிக்க வேண்டும்.

९. पूजाक्रमः
9. பூஜை முறை

गणेशं मूललिङ्गं च ताण्डवेशमुमापतिम्।
परिवारार्चनां कृत्वा पार्वतीं चण्डभैरवौ॥

गणेशं	*முதலில் கணபதியையும்*
मूललिङ्गं च	*பிறகு மூலஸ்தான லிங்கத்தையும்*
ताण्डवेशं	*நடராஜரையும்*
उमापतिं	*ஸோமாஸ்கந்தரையும்*
परिवारार्चनां	*பரிவார தேவதைகளுடைய பூஜையையும்*
कृत्वा	*செய்து விட்டு*
पार्वतीं	*அம்பிகையையும்*
चण्डभैरवौ	*சண்டிகேச்வரர், பைரவர் இவர்களை முறையே பூஜிக்க வேண்டும்.*

१०. पूजासमये दिङ्निर्णयः
10. பூஜை செய்யும் போது திக்கு நியமம்

प्राक्पश्चिममुखेशन्तु उत्तराभिमुखार्चयेत्।
दक्षिणोदङ्मुखं देवं पूर्वाभिमुखतोर्चयेत्॥

प्राक्पश्चिममुखेशन्तु	*கிழக்கு மேற்கு முகமாக உள்ள தேவரை*
उत्तराभिमुखः	*(அர்ச்சகர்) வடக்கு முகமாக நின்று கொண்டு*
अर्चयेत्	*பூஜிக்க வேண்டும்.*

दक्षिणोदङ्मुखं — தெற்கு வடக்கு முகமாகவுள்ள

देवं — ப்ரபுவை
पूर्वाभिमुखतः — கிழக்கு முகமாக நின்று கொண்டு
अर्चयेत् — பூஜிக்க வேண்டும்.

११. पश्चिमाभिमुखदेवानां तत्पुरुषनिर्णयः
11. மேற்கு நோக்கின கடவுளின் தத்புருஷ நிர்ணயம்

लिङ्गस्याभिमुखं यत्तद्वारं तत्पूर्वमिष्यते।
तत्र तत्पुरुषो ध्येयः अन्यत्सर्वं यथाक्रमम्॥

लिङ्गस्य — லிங்கத்திற்கு
अभिमुखं — எதிரிலுள்ள
यत् — யாதொரு
द्वारं — வாசற்படியோ
तत् — அந்த வாசற்படியானது
पूर्वं — கிழக்கு திக்காக
इष्यते — ஆகமத்தில் நிச்சயிக்கப்படுகிறது.
तत्र — அந்த ஸ்தானத்திலுள்ளதை
तत्पुरुषो — தத்புருஷமாக
ध्येयः — தியானிக்க வேண்டும்.
अन्यत्सर्वं — மற்ற யாவும்
यथाक्रमम् — வழக்கமான முறைப்படி நிச்சயிக்கவும்.

१२. घण्टाताडनसमयः
12. மணியடிக்கும் வேளை

आगमार्थन्तु देवानां गमनार्थन्तु रक्षसाम्।
प्रपूजारम्भवेळायां घण्टाताडनमाचरेत्॥

देवानां	தேவர்களுடைய
आगमार्थन्तु	வருகைக்காகவும்
रक्षसां	அரக்கர்களுடைய
गमनार्थन्तु	செல்லுகைக்காகவும்
प्रपूजा	பூஜையினுடைய
आरम्भवेळायां	ஆரம்ப வேளையிலும்
घण्टाताडनं	மணியடித்தலை
आचरेत्	செய்ய வேண்டும்.

१३. घण्टाताडनकालः
13. மணியடிக்கும் காலம்

पूजारम्भे चाऽन्ते च नित्योत्सवनिवेदने।
एतस्मिन्नेव समये महाघण्टां प्रताडयेत्॥

पूजारम्भे च	பூஜை ஆரம்பத்திலும்
अन्ते च	முடிவிலும்
नित्योत्सवनिवेदने	நித்யோத்ஸவமும் நிவேதனமும் செய்யும் பொழுதும்
एतस्मिन्नेव समये	இந்த சமயங்களிலே
महाघण्टां	பெரியமணியை
प्रताडयेत्	நன்றாக அடிக்கவேண்டும்.

१४. आचार्यस्य पवित्रं मुख्यम्
14. ஆசார்யருக்கு பவித்ரம் முக்கியம்

सपवित्रकरेणैव सर्वं कार्यं समाचरेत्।
पञ्चभिः पौष्टिकं प्रोक्तं चतुर्भिश्चाभिचारिकम्॥
त्रिदर्भैः पैतृकं शान्तिं दर्भाभ्यां दैविकक्रिया।
दर्भेण प्रेतकार्यञ्च पवित्रस्य तु लक्षणम्॥

सपवित्र	பவித்ரத்தோடு கூடின
करेणैव	கையினாலேயே
सर्वं	ஸமஸ்தமான
कार्यं	செய்கைகளையும்
समाचरेत्	செய்ய வேண்டும்.
पञ्चभिः	ஐந்து தர்ப்பத்தால் செய்த பவித்ரம்
पौष्टिकं	புஷ்டியையும்
चतुर्भिः	நான்கு தர்ப்பை பவித்ரம்
आभिचारिकं	சத்ரு நாசத்தையும்
त्रिदर्भैः	மூன்று பில் பவித்ரம்
पैतृकं	பித்ரு த்ருப்தியையும்
शान्तिं	சாந்தியையும்
दर्भाभ्यां	இரண்டு பில் பவித்ரம்
दैविकक्रिया	தேவகார்யத்தில் தேவத்ருப்தியையும்
दर्भेण	ஒரு பில் பவித்ரம்
प्रेतकार्यञ्च	ப்ரேத கார்யத்தில் ப்ரேத த்ருப்தியையும் செய்யும் என்று
पवित्रस्य	பவித்ரத்தினுடைய
लक्षणं	லக்ஷணம்
प्रोक्तम्	சொல்லப்பட்டுள்ளது.

१५. एष च

15. இதுவுமது

यथा वज्रं सुरेन्द्रस्य यथा शूलं हरस्य च।
यथा चक्रं महाविष्णोः तथा गुरोः पवित्रकम्॥

सुरेन्द्रस्य	*தேவேந்திரனுக்கு*
वज्रं	*வஜ்ராயுதமானது*
यथा	*எப்படியோ*
हरस्य	*ஈச்வரனுக்கு*
शूलं च	*சூலாயுதமும்*
यथा	*எப்படியோ*
महाविष्णोः	*விஷ்ணுவுக்கு*
चक्रं	*சக்ராயுதம்*
यथा	*எப்படியோ*
तथा	*அப்படியே*
गुरोः	*ஆசார்யருக்கு*
पवित्रकम्	*பவித்ரமானது ஆகும்.*

१६. आचार्यस्य हस्तदेवताः

16. ஆசார்யர் ஹஸ்த தேவதைகள்

मणिबन्धे ब्रह्मविष्णुः अङ्गुष्ठे तु विनायकः।
तर्जन्यामीश्वरः प्रोक्तो मध्यमायां वृषस्तथा॥
अनामिकायां देवी च कनिष्ठिकायां गुहस्तथा।
करपृष्ठे चन्द्रसूर्यौ नखे तारागणास्तथा॥
रेखासु सर्वदेवाश्च वसन्ति हि न संशयः॥

मणिबन्धे	*மணிக்கட்டில்*
ब्रह्मविष्णुः	*ப்ரம்மாவும் விஷ்ணுவும்*

अङ्गुष्ठे तु	பெருவிரலிலோவெனில்
विनायकः	கணபதியும்
तर्जन्यां	ஆள்காட்டும் விரலில்
ईश्वरः	பரமேச்வரனும்
तथा	அப்படியே
मध्यमायां	நடுவிரலில்
वृषः	வ்ருஷபமும்
अनामिकायां	மோதிரவிரலில்
देवी च	பார்வதிதேவியும்
तथा	அப்படியே
कनिष्ठिकायां	சுண்டுவிரலில்
गुहः	முருகனும்
करपृष्ठे	கையின் பின்பகுதியில்
चन्द्रसूर्यौ	சந்திர சூரியர்களும்
तथा	அப்படியே
नखे	நகத்தில்
तारागणाः	நக்ஷத்ர கூட்டங்களும்
रेखासु	ரேகைகளில்
सर्वदेवाश्च	ஏனைய தேவர்களும்
वसन्ति हि	வசிக்கிறார்கள்
न संशयः (इति) प्रोक्तः	சந்தேகமில்லை என்று சொல்லப்பட்டுள்ளது.

१७. पञ्चशुद्धयः

17. ஐந்துவித சுத்திகள்

आत्मनश्च स्थलस्याऽपि तथैव द्रव्यलिङ्गयोः।
उक्तन्तु शोधनं पञ्च मन्त्रस्यापि क्रमेण तु॥

आत्मनश्च	ஆன்மாவினுடையவும்
स्थलस्याऽपि	இடத்தினுடையவும்

तथैव	*அப்படியே*
द्रव्यलिङ्गयोः	*புஷ்பம் பலம் முதலிய வஸ்துக்களுடையவும் லிங்கத்தினுடையவும்*
मन्त्रस्यापि	*மந்திரத்தினுடையவும்*
पञ्च	*ஆக ஐந்து*
शोधनं तु	*சுத்தியோவெனில்*
क्रमेण	*வரிசையாக*
उक्तम्	*ஆகமத்தில் சொல்லப்பட்டுள்ளது.*

१८. पञ्चगव्यम्
18. பஞ்சகவ்யம்

मध्ये क्षीरं पीतगवां पूर्वे सितगवान्दधि।
दक्षिणे तु घृतं प्रोक्तं कपिलागोर्विशेषतः॥
कृष्णगोरुत्तरे मूत्रं प्रतीच्यां रक्तगोश्शकृत्।
ऐशान्यां दर्भतीर्थञ्च स्थाप्य संपूजयेत् क्रमात्॥

मध्ये	*நடுவில்*
पीतगवां	*பஞ்சவர்ண பசுவினுடைய*
क्षीरं	*பாலையும்*
पूर्वे	*கிழக்கில்*
सितगवां	*வெள்ளை பசுவினுடைய*
दधि	*தயிரையும்*
दक्षिणे तु	*தெற்கில்*
विशेषतः	*சிறப்பாக*
कपिलागोः	*கபிலவர்ண பசுவினுடைய*
घृतं	*நெய்யையும்*
उत्तरे	*வடக்கில்*
कृष्णगोः	*கருப்பு பசுவினுடைய*

मूत्रं	கோஜலத்தையும்
प्रतीच्यां	மேற்குத்திக்கில்
रक्तगोः	சிகப்பு பசுவினுடைய
शकृत्	சாணத்தையும்
ऐशान्यां	ஈசான திக்கில்
दर्भतीर्थञ्च	குசதீர்த்தத்தையும்
क्रमात्	வரிசையாக
स्थाप्य	வைத்து
संपूजयेत्	பூஜிக்க வேண்டும் என்று
प्रोक्तम्	சொல்லப்பட்டுள்ளது.

१९. प्रच्छन्नपटः मुख्यः
19. திரை முக்கியம்

पूजाभिषेककाले तु प्रच्छन्नपटमुत्तमम्।
पापी रोगी परिभ्रष्टः नास्तिकश्शिवनिन्दकः॥
दुर्मुखश्च दुराचारः मूर्खश्च गुरुनिन्दकः।
वेदविक्रियविप्रश्च स्वैरिणी भक्तिहीनकः॥
संकरोऽक्षर हीनश्च अदीक्षावान् तथैव च।
कूनखः कुष्ठरोगी च एकाक्षी अङ्गहीनकः॥
नारी तैलाभिषिक्तश्च गोस्नश्च पञ्चपातकः।
एतादृशैस्तु पुरुषैः दृष्टा पूजा तु निष्फला॥
तस्मादतिप्रयत्नेन पटं कुर्याद्यथाविधि॥

पूजाभिषेककाले तु	பூஜை அபிஷேகம் செய்யும் காலத்தில்
प्रच्छन्नपटं	திரையானது
उत्तमं	முக்கியமானது (ஏனெனில்)
पापी	தீவினை செய்தவன்
रोगी	பிணியுடையவன்

परिभ्रष्टः	பல பேர்களால் தள்ளப்பட்டவன்
नास्तिकः	கடவுள் இல்லையென்பவன்
शिवनिन्दकः	சிவனை நிந்திப்பவன்
दुर्मुखश्च	விகாரமான முகத்தையுடையவன்
दुराचारः	ஒழுக்கம் கெட்டவன்
मूर्खश्च	கோபத்தையுடையவன்
गुरुनिन्दकः	ஆசானை தூஷிப்பவன்
वेदविक्रियविप्रश्च	பணம் வாங்கிக்கொண்டு வேதம் சொல்லிக்கொடுப்பவனும்
स्वैरिणी	பதிவ்ரதையாக இல்லாதவள்
भक्तिहीनकः	ஆண்டவனிடம் அன்பில்லாதவன்
संकरः	இரு ஜாதியில் பிறந்தவன்
अक्षरहीनश्च	எழுத்தே தெரியாதவன்
अदीक्षावान्	தீக்ஷையற்றவன்
तथैव च	அப்படியே
कूनखः	கோணின தேகத்தையுடையவன்
कुष्ठरोगी च	குஷ்டரோகியும்
एकाक्षी	ஒற்றைக்கண்ணன்
अङ्गहीनकः	அங்கம் குறைந்தவன்
नारी	பெண் தன்மையுடையவன்
तैलाभिषिक्तश्च	எண்ணை தேய்த்துக் கொண்டிருப்பவன்
गोघ्नश्च	பசுவைக் கொன்றவனும்
पञ्चपातकः	ஐந்து மஹாபாதகங்களைச் செய்தவன்
एतादृशैस्तु	இத்தகைய
पुरुषैः	புருஷர்களாலே
दृष्टा	பார்க்கப்பட்ட
पूजा तु	பூஜை (அபிஷேகம்) முதலியவை
निष्फला	பலனற்றதாகும்.

तस्मात्	ஆகையால்
अतिप्रयत्नेन	முழுமுயற்சியுடன்
यथाविधि	விதிமுறைப்படி
पटं	திரையை
कुर्यात्	போடவேண்டும்.

२०. प्रच्छन्नपटकाले दर्शनं न कर्तव्यम्
20. திரை போட்டிருக்கும் போது தரிசிக்கக்கூடாது

प्रच्छन्नपटकाले तु न कुर्यात् लिङ्गदर्शनम्।
तत्काले दर्शनं मोहात् संकटं पुत्रभार्ययोः॥

प्रच्छन्नपटकाले तु	திரை உள்ளபோதோவெனில்
लिङ्गदर्शनं	ஸ்வாமி தரிசனத்தை
न कुर्यात्	செய்யக்கூடாது.
तत्काले	திரை உள்ள காலத்தில்
मोहात्	அறிவின்மையால்
दर्शनं	தரிசிப்பானேயானால்
पुत्रभार्ययोः	அவனுடைய மனைவி புத்திரர்களுக்கு
संकटम्	உபத்திரம் உண்டாகும்.

२१. अभिषेक द्रव्य फलम्
21. அபிஷேக திரவிய பலன்

पाद्यं पापविनाशं स्यात् श्रियं त्वाचमनीयकम् ।
अर्घ्यन्तु कर्मसाफल्यं आसनं पुत्रपौत्रदम् ॥
जलन्तु शान्तिदं प्रोक्तं गन्धतैलं सुखप्रदम् ।
पञ्चामृतं संपदश्च कदली सस्यवर्धनम् ॥

पनसं लोकवश्यञ्च आम्रं सर्वजयप्रदम् ।
दाडिमी क्रोधनाशञ्च इक्षु शोकहरं तथा ॥
नारङ्गन्तु सुमन्त्रित्वं लिकुचं मृत्युनाशनम् ।
शर्करा शत्रुनाशं स्यात् नाळिकेरन्तु राज्यदम् ॥
चिन्तितं तु फलं क्षीरं दधि वै रूपसंपदम् ।
मधुसंगीतज्ञानाय आज्यं बुद्धिविवर्धनम् ॥
अन्नाभिषेकं सौभाग्यं हिमतोयन्तु दिग्जयम् ।
शङ्खं सत्पुण्यफलदं मार्जनं रिपुनाशनम् ॥
गन्धाभिषेकं सायुज्यं सान्निध्यं स्नपनाद् भवेत् ।
दारिद्र्यमोचनं वस्त्रं अलङ्कारन्तु सुन्दरम् ॥
अष्टैश्वर्यप्रदं भूष्यं माला दुःखनिवर्तनी ।
विजयं दिग् मृगमदं सौभाग्यं चन्दनं तथा ॥
अक्षतं मलनाशञ्च ताम्बूलं क्षयनाशकम् ।
प्रार्थितार्थप्रदं बिल्वं तुळसी पुत्रदायिनी ॥
धूपं तमोपहं प्रोक्तं दीपं ज्ञानप्रदं भवेत् ।
नैवेद्यं राज्यफलदं भक्षणं बलमक्षयम् ॥
कर्पूरं भयनाशञ्च भूतिर्भूतिकरी भवेत् ॥

पाद्यं	*கால் அலம்பத்தரும் ஜலம்*
पापविनाशं	*பாபத்தை துலைப்பதாக*
स्यात्	*ஆகும்.*
आचमनीयकं तु	*ஆசமன ஜலமோவெனில்*
श्रियः	*லக்ஷ்மீ சம்பத்தையும்*
अर्घ्यन्तु	*கை அலம்பத் தரும் ஜலமோவெனில்*
कर्मसाफल्यं	*கார்யத்தின் பலத்தையும்*
आसनं	*உட்காரத்தரும் ஆஸநம்*
पुत्रपौत्रदं	*பிள்ளை பேரனைக் கொடுப்பதாயும் ஆகும்.*
जलन्तु	*அபிஷேகத்திற்கு விடும் ஜலமோவெனில்*

शान्तिदं	மன சாந்தியை கொடுப்பதாக
प्रोक्तं	சொல்லப்பட்டுள்ளது.
गन्धतैलं	வாசனை எண்ணை
सुखप्रदं	இன்பத்தைத் தரும்.
पञ्चामृतं	பஞ்சாம்ருதமானது
संपदञ्च	ஐச்வர்யத்தையும்
कदली	வாழைப்பழமானது
सस्यवर्धनं	வ்யவஸாய வ்ருத்தியையும்
पनसं	பலாப்பழமானது
लोकवश्यञ्च	உலக வசீகரத்தையும்
आम्रं	மாம்பழமானது
सर्वजयप्रदम्	எல்லா ஜயத்தையும் கொடுக்கக் கூடியதாயும்
दाडिमी	மாதுளம்பழமானது
क्रोधनाशञ्च	கோப சாந்தியையும்
तथा	அப்படியே
इक्षु	கரும்பானது
शोकहरं	வருத்தத்தைப்போக்கடிப்பதாகவும்.
नारङ्गन्तु	சாத்துக்குடியோவெனில்
सुमन्त्रित्वं	நல்ல மந்திரி பதவியையும்
लिकुचं	எலுமிச்சம்பழம்
मृत्युनाशनं	யமபய நிவாரகமாகவும்
शर्करा	சர்க்கரையானது
शत्रुनाशं	சத்ருவை துலைப்பதாகவும்
स्यात्	ஆகும்.
नालिकेरन्तु	தேங்காயோவெனில்
राज्यदं	ராஜ்யத்தைத்தருவதாகவும்
क्षीरं तु	பாலோவெனில்
चिन्तितं	விரும்பின
फलं	பயனைத்தருவதாகவும்

दधि वै	தயிரோவெனில்
रूपसंपदं	அழகைத் தருவதாகவும்
मधु	தேனானது
संगीतज्ञानाय	சங்கீதம் அறிவதின் பொருட்டும்
आज्यं	நெய்யானது
बुद्धिविवर्धनम्	அறிவை வளர்ப்பதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

குறிப்பு: ஒவ்வொரு வஸ்துவிலும் அபிஷேகம் என்று சேர்த்துக்கொள்ள வேண்டும்.

अन्नाभिषेकं	அன்னத்தால் அபிஷேகம் செய்தல்
सौभाग्यं	நல்ல பாக்யங்களையும்
हिमतोयन्तु	பன்னீரோவெனில்
दिग्जयं	திக்விஜயத்தையும்
शङ्खं	சங்க ஜலாபிஷேகமானது
सत्पुण्यफलदं	நல்ல புண்ணிய பலமான சுகத்தையும்
मार्जनं	துடைத்தல்
रिपुनाशनं	சத்ருவை துலைத்தலையும்
गन्धाभिषेकं	சந்தனாபிஷேகமானது
सायुज्यं	ஸாயுஜ்ய பதவியையும்
स्नपनाद्	ஸ்நபனாபிஷேகத்தால்
सान्निध्यं	மூர்த்தி ஸாந்நித்யமும்
भवेत्	உண்டாகும்.
वस्त्रं	வஸ்த்ரம் சாத்துதல்
दारिद्र्यमोचनं	தரித்திரத்தை துலைத்தலையும்
अलङ्कारन्तु	பகவானுக்கு அலங்கரிப்பதோவெனில்
सुन्दरं	அழகையும்
भूष्यं	ஆபரணங்கள் அணிவிப்பது

अष्टैश्वर्यप्रदं	அஷ்டைச்வர்யத்தைக் கொடுப்பதாகவும்
माला	புஷ்பமாலையானது
दुःखनिवर्तनी	துக்கத்தை நீக்குவதாகவும்
मृगमदं	கஸ்தூரியானது
दिग्विजयं	திக்கு விஜயத்தையும்
तथा	அப்படியே
चन्दनं	சந்தன தாரணமானது
सौभाग्यं	ஸௌபாக்யத்தை தருவதாகவும்
अक्षतं	அக்ஷதையானது
मलनाशश्च	மல நாசத்தை உண்டு பண்ணுவதாகவும்
ताम्बूलं	வெற்றிலைப் பாக்கானது
क्षयनाशकं	குறைவை நாசம் செய்வதாகவும்
बिल्वं	பில்வம் சாத்துதல்
प्रार्थितार्थप्रदं	விரும்பின பலத்தைக் கொடுப்பதாகவும்
तुळसी	துளஸீ சாத்துதல்
पुत्रदायिनी	புத்திரனைக் கொடுப்பதாகவும்
धूपं	தூபமிடுதல்
तमोपहं	அறிவில்லாமையைப் போக்குவதாகவும்
प्रोक्तं	சொல்லப்பட்டுள்ளது.
दीपं	தீபமானது
ज्ञानप्रदं	அறிவைத் தருவதாக
भवेत्	ஆகும்.
नैवेद्यं	நிவேதனம் செய்தல்
राज्यफलदं	ராஜ்யத்தைத் கொடுப்பதாயும்
भक्षणं	பலஹாரங்கள்
अक्षयं बलं	குறைவற்ற பலத்தையும்
कर्पूरं	கர்பூர நீராஞ்ஜனமானது

भयनाशश्च — பயத்தை நாசம் செய்வதாகவும்
भूतिः — விபூதி
भूतिकरी — செல்வத்தைத் தருவதாகவும்
भवेत् — ஆகும்.

२२. षोडशोपचारः
22. ஷோடசோபசாரம்

स्नानं वस्त्रविलेपनश्च कुसुमं धूपश्च दीपो हविः
ताम्बूलं मुखवासपाद्यसहितं संगीतनृत्तं महत् ।
होमो भूतबलिप्रदानसहितः नित्योत्सवश्च स्तुतिः
एतत् षोडशपूजनं च कुरुते ह्यैश्वर्यमाप्नोति सः ॥

स्नानं — அபிஷேகித்தல்
वस्त्र — வஸ்த்ரம் சாத்துதல்
विलेपनं — சந்தனம் பச்சைகற்பூரம் குங்குமப்பூ இவைகளைப்பூசுதல்
कुसुमं — புஷ்பம் சாத்துதல்
धूपश्च — தூபம் காட்டுதலும்
दीपो — தீபஹாரத்தி செய்தல்
हविः — அன்னம் நிவேதித்தல்
ताम्बूलं — வெற்றிலை பாக்கு ஸமர்ப்பித்தல்
मुखवासः — ஏலக்காய் இலவங்கம் ஜாதிக்காய் ஜாதிபத்தரி இவைகளை பொடி செய்து தாம்பூலத்துடன் கலந்து ஸமர்ப்பித்தல்
पाद्यसहितं — கால் அலம்ப ஜலம் கொடுத்தல்
संगीत — நன்றாக பாடுதல்
महत् नृत्तं — உயர்ந்த நாட்டியம் செய்வித்தல்
होमो — நித்யாக்நி கார்யம் செய்வித்தல்

भूतबलिप्रदान

सहितः	பலி பீடங்களில் பலி போடுவதுடன்
नित्योत्सवः	நித்யோத்ஸவம் செய்தல்
स्तुतिश्च	ஸ்தோத்ரம் செய்தல் ஆகிய
एतत्	இந்த
षोडशपूजनं च	பதினாறு விதமான பூஜித்தலை
कुरुते	எவன் செய்கிறானோ
सः	அவன்
ऐश्वर्यं	அஷ்டைச்வர்யத்தையும்
आप्नोति	அடைகிறான்.

२३. मन्त्रादीनामभावे दोषः
23. மந்த்ராதிகள் இல்லாமைக்கு தோஷம்

न्यूनक्रियाकरः शिल्पी मन्त्राभावकरो गुरुः।
अतिसूक्ष्मद्रव्यदाता भजेरन् नरकं त्रयः॥

न्यूनक्रियाकरः	விக்ரஹங்கள் செய்யும் போது குறைந்த வேலை செய்கிற
शिल्पी	சில்பியும்
मन्त्राभावकरः	பூஜை செய்யும் போது மந்திரம் சொல்லாமல் செய்கிற
गुरुः	ஆசார்யரும்
अतिसूक्ष्म	மிகக் குறைந்த
द्रव्यदाता	திரவியங்களை கொடுக்கும் யஜமானனும்
त्रयः	இம்மூவரும்
नरकं	நரகலோகத்தை
भजेरन्	அடைவார்கள்.

२४. एष च
24. இதுவுமது

जलहीने कुलनाशः गन्धहीनं भयावहम् ।
निर्वस्त्रं वस्त्रहीने स्यात् पुष्पहीने तु संकटम्॥
मन्त्रहीने मरणं स्यात् धूपहीनन्तु रोगदम् ।
अज्ञानदं दीपहीनं असान्निध्यमनग्नितः।
नैवेद्यहीने दुर्भिक्षं अबलिर्ग्रामनाशनम् ।
ग्रामे पूजाविहीने तु पुत्रश्रीभूमिनाशनम् ॥

जलहीने	*அபிஷேகத்திற்கு ஜலமில்லையெனில்*
कुलनाशः	*குலநாசமேற்படும்.*
गन्धहीने	*சந்தனம் சாற்றவில்லையெனில்*
भयावहं	*பயமுண்டாகும்.*
वस्त्रहीने	*கடவுளுக்கு வஸ்த்ரம் சாற்றவில்லையெனில்*
निर्वस्त्रं स्यात्	*பூஜை செய்கிறவனுக்கும் ஊரில் உள்ளவர்களுக்கும் உடுத்த உடை இல்லாமல் போகும்.*
पुष्पहीने तु	*புஷ்பம் சாற்றவில்லையெனில்*
संकटं	*கிராமத்தில் கலகமுண்டாகும்.*
मन्त्रहीने तु	*மந்திரமின்றி அர்ச்சித்தல்*
मरणं स्यात्	*பூஜை செய்கிறவனுக்கு மரண பயமுண்டாகும்.*
धूपहीनन्तु	*வாஸனாதி திரவியங்களால் தூபமிடவில்லையெனில்*
रोगदं	*உடல் நலக்குறைவு உண்டாகும்.*
दीपहीनं	*தீபம் இல்லையெனில்*
अज्ञानदं	*அறிவின்மையைக்கொடுக்கும்.*
अनग्नितः	*நித்யாக்னி செய்யவில்லையெனில்*

असान्निध्यं	மூர்த்தி ஸாந்நித்யம் ஏற்படாது.
नैवेद्यहीने	நிவேதனம் செய்யாவிடில்
दुर्भिक्षं	அவ்வூரில் பிச்சை போடுவதற்குக் கூட அரிசி இராது.
अबलिः	பலி போடாவிட்டாலும்
ग्रामे	ஊரிலுள்ள (கோயிலில்)
पूजाविहीने तु	பூஜை நடக்கவில்லையென்றாலும்
पुत्रश्रीभूमिनाशनम्	ஊரில் பிள்ளைகள் சம்பத்துக்கள் பூமிகள் யாவற்றிற்கும் நாசமுண்டாகும்.

२५. षडध्वन्यासफलम्
25. ஷடத்வ ந்யாஸ பலன்

सर्वज्ञत्वं कलान्यासे नित्यतृप्तिश्च तत्त्वके ।
अनादिबोधं भुवने वर्णन्यासे स्वतन्त्रकम्॥
